சிறப்பிதழ்
Special Issue

12-கார்த்திகை 2050
28-November 2019

ISSN : 2321-0737

# செம்மொழித் தமிழ்

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)

# Journal of Classical Thamizh

(A Quarterly International Multilateral Thamizh Journal)

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandrasegaran*

*Editorial Board*
*Dr. S. Kumaran*
*Dr. S. Rajaram*
*Dr. Aranga. Pari*
*Dr. G. Rajagopal*
*Dr. PM. Jamahir*
*Dr. S. Chitra*
*Dr. P. Velmurugan*
*Dr. A. Ekambaram*
*Dr. E.R. Ravichandran*
*Dr. K. Thilagavathi*
*Dr. G. Sheik Meeran*
*Dr. R. Jagadheesan*
*Dr. P. Selvakumar*
*Dr. T. Jegathesan*
*Dr. R. Vijayarani*
*Dr. J. Chandrakala*
*Dr. T.K. Jasmin Sudha*
*Dr. Sinnathamby Santhirasegaram*
*Dr. S. Ramesh*
*Dr. Manivannan Murugesan*
*Dr. A. Rameez*
*Dr. G. Mariappan*
*Dr. K. Manickaraj*

சிறப்பிதழ் :

முதுகலை & தமிழாய்வுத்துறை
ஜமால் முகம்மது கல்லூரி (தன்னாட்சி)
(தேசியத் தர மறுமதிப்பீட்டு மூன்றாம் சுற்றில் 'A' தரச்சான்று பெற்றது)
திருச்சிராப்பள்ளி-620 020, தமிழ்நாடு, இந்தியா

அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர், தமிழ்நாடு, இந்தியா

## பன்முகத் தளத்தில் தமிழியல்

பன்னாட்டுக் கருத்தரங்கம் -2019

சிறப்பிதழ் ஆசிரியர்
**Special Issue Editor**

**முனைவர் க. சிராஜுதீன்**
உதவிப்பேராசிரியர், முதுகலை &தமிழாய்வுத்துறை
ஜமால் முகம்மது கல்லூரி (தன்னாட்சி)
திருச்சிராப்பள்ளி -620 020.

*Published by*
**RAJA PUBLICATIONS**
No. 10 (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India.
Mobile : 9600535241
Website : www.rajapublications.com

6 பகுதி-3
சிறப்பிதழ்
Special Issue

மற்றொன்று:

# நவீனத் தமிழாய்வு

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)

ஜனவரி - மார்ச்

ஏப்ரல் - ஜூன்

ஜூலை - செப்டம்பர்

அக்டோபர் - டிசம்பர்

Journal of

# Modern Thamizh Research

**(A Quarterly International Multi lataral Thamizh Journal)**

January - March

April - June

July - September

October - December

ISSN : 2321 - 984X

EDUCATIONAL STATUS OF IRULA TRIBES IN VILLUPURAM DISTRICT ISSUES AND CHALLANGES

Published by: Raja Publications

Printed: The Printing House

# அரிமதி தென்னகனின் ‘கிள்ளைகளே கேளுங்கள்’ கவிதையில் சமுதாயச் சிந்தனைகள்

முனைவர் ச. சத்திய பாமா
உதவிப் பேராசிரியர், வாவு வஜீஹா வனிதையர் கலை அறிவியல் கல்லூரி,
காயல்பட்டணம், தமிழ்நாடு, இந்தியா.

## முன்னுரை

சமூகத்தின் தேவைக்கேற்ப இலக்கியம் படைக்கப்படுகிறது. சமூக விழிப்புணர்வின் ஒரு நிலையாய் அதன் அவலங்களைப் பட்டியலிட்டுக் கூறுவதால் பயன் பெரிதும் இல்லை. வெறும் இரங்கற்பாவாய் அமையாது. அவ்இறக்கத்தின் மூலம் ஏற்றம் காணுவதைக் கூறுவது படைப்பு நோக்கமாகச் சமூகம் எதிர்பார்க்கின்றது. பல சிக்கலான ‘கரு’வினையும் நான்கே வரிகளில் அடக்கி, படிப்பவர் மனதில் தெளிவாகப் புரிந்து கொள்ளும் வகையில் கவிதை அமைகின்றது. கவிதை மூலம் சமூகத்திற்கு தேவையான சிறந்த கருத்துக்களை எடுத்துக் கூறுவது நன்மை பயப்பனவாக அமையும். கவிஞர் அரிமதிதென்னகன் மலை, அருவி, தென்றல் என இயற்கை அழகினை வருணிப்பதோடு மட்டுமின்றி, சமூக சீர்க்கேட்டினைச் சீர்திருத்த வேண்டியதன் முக்கியத்துவத்தை உணர்ந்து கவிதை புனைந்துள்ளார். இவருடைய கவிதைகள் மொழியை மேம்படுத்துவதை விட சமுதாயத்தை மேம்படுத்துவதாகவே அமைந்துள்ளது. அரிமதிதென்னகனின் ‘கிள்ளைகளே கேளுங்கள்’ கவிதையில் காணப்படும் சமுதாயச் சிந்தனைகளை இக்கட்டுரையில் காண்போம்.

## படைப்பாளர் கடமை

சமூகத்தைச் சீர்த்திருத்தும் பணியில் எழுதுகோலுக்கும் முக்கிய பங்கு உண்டு. சமுதாயத்தில் நடைபெறும் அவலங்களை கண்டும் காணாமல் போகும் மனிதர்கள் மிகுந்து காணப்படுகின்றனர். ஆனால் ஒரு படைப்பாளன் அநீதியை கண்டும் காணாமல் போகக்கூடாது. அநீதியை எடுத்துக் கூறி, சீர்படுத்த முயல வேண்டுமென்பதை அரிமதிதென்னகன்

“கவிஞனே கவிபாடு – வாழும்
காலத்தின் சிந்தனையோடு ...
உச்சியில் ஏறினும் உறுதுயர் வீழினும்
துச்சமேஎன, மக்கள் துயர் கண்டு வெடிப்பாய்
சமநிலை உணர்வினை நீ பெறல் நன்று
சமுதாய நோக்கினில் வழிசொல் நின்று
எழுதுகோல் வலிமையை இமயத்தில் ஏற்று
எளியவர் துணையாகும் நெறியினைப் போற்று”
(கி.கே-ப.56)

என்று கூறி, எளியவர்க்கு படைப்பாளி எழுதுகோல் துணையால் நீதி கிடைக்க வழிசெய்ய வேண்டுமென்கின்றார். மேலும்,

“கவிதைக் குயிலே கவிபாடு
சமுதாயக் கொடுமைகளைச் சாடு
மானுட நேயத்தையை நாடு”
(கி.கே – ப.4)

என்றும் கூறி, சமுதாயக் கொடுமையைச் சாடிடவும், மனித நேயத்தை பாடிடவும் கவிஞர்களுக்கு அறிவுறுத்துகின்றார்.

## குழந்தை தொழிலாளர் நிலை

பிறந்து சில ஆண்டுகள் இல்லத்திலும் பின் கல்விக்கூடத்திலும் பாதுகாக்கப்பட வேண்டிய குழந்தைகள், தன் பெற்றோரின் பொறுப்பற்ற தன்மையினால், குழந்தை தொழிலாளர்களாக மாறும் அவலம் ஏற்படுகிறது. குழந்தை தொழிலாளர்களை பணியில் அமர்த்தக்கூடாது என அரசு சட்டம் இயற்றிய பொழுது இந்நிலை முற்றிலும் ஓய்ந்தபாடில்லை. கல்வி கற்று தம்

வாழ்வை உயர்த்தப் பள்ளிக்குச் செல்ல முடியாமல் குப்பை பொறுக்கும் நிலைக்கு குழந்தைகள் தள்ளப்படுவதை,

"குப்பைத் தொட்டியில் குனிகிறான் பாரடி
குனிந்து பலவற்றைப் பொறுக்குதல் காணடி...
பள்ளிக்குச் செல்லவில்லை நமக்கில்லை
வெட்கம்
பாராமல் இருப்பதே சமுதாயப் பெருங்குற்றம்...
இதுவொரு தொழிலெனில் இமயமே
குறுகிடும்" (கி.கே – ப.58)

என்று கூறி, குழந்தைகள் குப்பை பொறுக்கும் தொழில் செய்வதை கண்டவுடன் தடுத்து, கல்வி கற்க வழி செய்ய வேண்டும். கண்டும் காணாமல் இருந்தால் பெரும் குற்றமாக அமையும் என்கிறார் கவிஞர்.

**மாணாக்கர் கடமை**

கல்வி கண் போன்றது. கல்வியை கற்பதால் ஒருவன் உயர்ந்த நிலையை அடைய முடியும். எனவேதான் ஔவையார்

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே"
(நீதிநூல் மாலை, பா.35-36)

என்றும் திருவள்ளுவர்,

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக" (குறள்.391)

என்றும் கல்வியின் சிறப்பை எடுத்துரைக்கின்றனர். நாட்டின் நாளைய எதிர்காலத்தைத் தன் கையில் கொண்டுள்ள மாணாக்கரின் இன்றைய கடமை நல் கல்வியை முறைப்படி சிறப்பாக நிறைவு செய்வதே ஆகும். இதைவிடுத்துப் பொதுவாழ்வில் ஈடுபடலும், பொறுப்பின்றித் திரிதலும் கூடாது என்பதை,

"மானவனே மாணவனே – கல்வி
மலர் பறிக்கப் போனவனே
கள்ளிக்காட்டின் பக்கம் நீ
கவனிப்பாய் ஏனப்பா
பாம்போடு விளையாட – அரசியல்
பக்கம் நீ போகாதே!
திரைப்படமே வாழ்வென்று – நீந்த
தேனாகிப் போகாதிரே!
தாய்தந்தை மட்டுமென்று இந்த
தாயகமே எதிர்பார்க்கும்
தேனெடுக்கும் மலர்வண்டு – வீணாய்த்
தெருவோரம் சுற்றுவதோ" (கி.கே – ப.41)

என்று ஆணித்தரமாக கடமை செய்ய மாணாக்கர்களுக்கு எடுத்துரைக்கின்றார்.

**போதையை தவிர்க்க அறிவுறுத்தல்**

இன்றைய நவநாகரிக உலகில் போதை என்னும் மாய பிசாசு பலரைப் பிடித்து ஆட்டுகின்ற அவலம் மிகுந்து காணப்படுகின்றது. யாரை வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் வசியப்படுத்தி வீழ்த்தும் ஆற்றல் போதைக்கு உண்டு. பள்ளிப் பருவத்திலேயே பல மாணவர்கள் போதைப் பழக்கத்திற்கு அடிமையாவதால் அவர்களின் எதிர்காலமும், சமூகமும் பாழாக நேரிடுகின்றது. போதையிலே விழுந்தபின் எழுவது கடினம். போதையை ஒவ்வொரு மனிதனும் தன்னை எரிக்கும் நெருப்பாக எண்ணி தவிர்க்க வேண்டுமென்பதை,

"போதை எரியென வெறுக்கத் தயங்காதே"
(கி.கே – ப.72)

என்று கூறி, அறிவுறுத்துகின்றார் அரிமதிதென்னகன்.

**மனிதநேயம் காக்கும் கல்வி**

உலகம் முழுவதையும் ஒரே இனமாக கருதி அன்பு கொண்டவன் தமிழன். இன்று அந்நிலை முற்றிலும் மாறி உயிரை பறிக்கின்ற கொடுமைகளை செய்யும் நிலை அதிகரித்துக் கொண்டே வருகின்றன. தான் மட்டும் நலமாக வாழ்ந்தால் போதும் என்ற சுயநலம் பெருகியுள்ளது. மனிதநேயம் முற்றிலும் அழிந்து போகாமல் காக்க வேண்டுமென்றால் கல்வியே

மனித நேயத்தையும் கற்பிக்க வேண்டியது அவசியமென்பதை.

"அறிவியலைப் பயன்படுத்தும் அறிவு வேண்டும் வேண்டும்
ஆலைத்தொழில் செய்துவரப் பொறியியலே தூண்டும்
திறமை மட்டும் பெறுவதுதான் தீமை வளர்ப்பதாகும்
மனிதநேயம் பெறுதல் ஒன்றே கல்வியாகும் ஆகும்" (கி.கே – ப.114)

என்று கூறி வழிகாட்டுகின்றார்.

**அனைவரும் ஒன்றென்ற குறிக்கோள்**

மனிதன் தொடர்ந்து காலங்காலமாய் சாதியென்னும் வெறிபிடித்தும், மதம் என்னும் மதம் பிடித்தும் திரிகின்ற நிலை நாட்டில் நிலவுகின்றது. சாதிக்கும், மதத்திற்கும் சங்கங்கள் வைப்பதால் சங்கடங்கள் உருவாகும் நிலையை மாற்றவேண்டுமென்பதை,

"சமுதாயச் சிந்தனை நாட்டின் தேவை
சாத்திர மாற்றமே இன்றைய சேவை
சென்றவழி செல்லாமல் புதியவழி சமைப்பீர்
ஒன்றே இனமென்றும் உலக ஆட்சி அமைப்பீர்"
(கி.கே – ப.22)

என்று கூறி இதுவரை உள்ள நிலை மாறி உலகமக்கள் அனைவரும் ஒன்று என்ற குறிக்கோளுடன் வாழ வழிகாட்டுகின்றார்.

**நிலம் மாசுபடுவதை தடுக்கும் முறை**

இயற்கையின் படைப்பில் உருவான நிலம் தூய்மையானது. நிலத்தை மனிதன் தன் செயல்களால் அதன் புனிதத்தன்மையை இழக்கச் செய்து கொண்டிருக்கிறான். குப்பைகளை நிலத்தில் வீசி எறிவதனால் நோய் ஏற்படும் அபாயம் இருப்பதை,

"தப்பான குப்பைகள் நோய் கொள்ளக் கொடுக்கும்" (கி.கே – ப.15)

என்று கூறுவதோடு, உயிரை இழக்கின்ற நிலையும் ஏற்படுமென்பதை,

"உயிரைச் சிறிய தூக்குக்கயிறு தொடும் நிலை வரும்" (கி.கே – ப.15)

என்றும் கூறி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த முயல்கிறார்.

**நீர் மாசுபடுவதை தடுக்கும் முறை**

நீரின்றி அமையாது உலகம். மனிதன் உயிர்வாழ தேவையானவைகளுள் ஒன்று நீர். நீர் மாசுபாடு இன்றைய காலகட்டத்தில் பெருகிவருகின்றது. தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவுகள் நீர்நிலைகளில் சேர்க்கப்படும் அவலம் மிகுந்து காணப்படுகின்றன. மாசு கலந்த நீரை குடிப்பதால் மனிதனை பலவிதமான நோய்கள் தாக்குகின்ற நிலை ஏற்படுகிறது. நீர் மாசுபடுவதைத் தடுக்க,

"ஆற்றின் தூய்மைதான் அதற்குள்ள கற்பு
அசுத்தம் கலவாமல் தடுப்பதே பொறுப்பு"
(கி.கே – ப.15)

என்ற கவிதை மூலம் வலியுறுத்துகின்றார்.

**காற்று மாசுபடுவதை தடுக்கும் முறை**

மனிதன் உணவின்றிச் சிறிது நாட்களும், நீரின்றி ஓரிரு நாட்களும் இருக்கலாம். ஆனால் சுவாசிக்க காற்றின்றி சில நிமிடங்கள் கூட இருக்க முடியாது. காற்று தரும் மரங்களையும் அழிப்பதால் சுவாசிக்க காற்றின்றி திரியும் அவலம் நேரிடும் என்பதை,

"மூச்சுக் காற்றுப்பை
முதுகினில் சுமக்கும் முறையிங்கு
வராமல் தடுக்கும் பொறுப்பு நமக்குண்டு"
(கி.கே – ப.15)

என்ற கவிதையில் நயம்பட எடுத்துரைக்கின்றார். மழைவளம் பெருகவும், சுற்றுச்சூழலை பாதுகாக்கவும், நிலச்சரிவு, மண்அரிப்பு இல்லாமல் போகவும் மரம் வளர்ப்பது அவசியமாகும். மரங்களை அழிப்பதால் ஏற்படும் அவலத்தை.

[illegible] (ISSN 2321-0737)
Journal of Classical Thamizh (Quarterly International Multilingual Thamizh Journal) December 2019 - Special Issue (ISSN 2321-0737)
[illegible]

“படிப்படியாய் மரங்கள் - மேகம்
பறந்துவரும் வழிகள்
வெட்டி வெட்டிச் சாய்க்கிறோம்
விறகாக்கி மகிழ்கிறோம்
இறங்கிவா மழை மட்டுமே இருக்காது
இயற்கை மணம் நீண்டகாலம் பொறுக்காது”
(கி.கே – ப.16)

என்ற கவிதையின் மூலம் எச்சரித்து, மரம் வளர்க்க வேண்டியதன் அவசியத்தை,

“மாசைநீக்க மரக்கன்றை மகிழ்ந்தே
நட்டால் நலந்தருமாம்
வாசம் கொண்ட நன்மரங்கள்
வேரால் நீர் பருகும் தேங்கும் நீரை உட்கொண்டு
பாங்காய்க் காற்றை தருவதனால் ஓங்கும்
வாழ்வைப் பெறுகின்றோம்” (கி.கே – ப.16)

என்று நயம்பட உணர்த்துகின்றார்.

### நிறைவாக

கவிதை என்பது வெறும் கண்துடைப்பாக இல்லாமல் அது மனித சமுதாயத்தை உயர்த்தும் ஒரு மாபெரும் தத்துவமாகவும், மனிதன் சார்ந்து வாழ தேவையான இயற்கையை பாதுகாப்பதாகவும் அமைந்து சமூகம் சிறக்க வழிகாட்ட வேண்டும் என்பதை அரிமதி தென்னகன் ‘கிள்ளைகளே கேளுங்கள்’ கவிதையில் உணர்வுபூர்வமாக சித்தரித்துக் காட்டியுள்ளார்.

௸